DOWNLOADED FROM MANUPATRA

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண்.541/2021</u>

**2022–ம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ம் நாள் புதன்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–3 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. G. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெரியசாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : குப்புசாமி | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : கீழப்பெரம்பலூர் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 70/2022 |

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

**1.** என்னை சாட்சி சொல்ல ஆதிமூலம் என்னை அழைத்து வந்தார். என நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன். நான் சொன்ன விவரங்களை கம்யூட்டரில் அடித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் சொல்லிய விவரங்களை அவர்கள் டைப்பு செய்யவில்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேலும், எனக்கு எழுதபடிக்கவும் தெரியாது. இந்த நீதிமன்றத்தில் யார் வழக்கு தாக்கல் செய்தார் என்று எனக்கு தெரியாது. 2021 ஏப்ரல் மாதம் தான் நான் வெளிநாட்டில் இருந்து இங்கு வந்தேன்.

2. நான் 20 வருடங்களுக்கு மேலாக நான் வெளிநாட்டில் தான் இருந்தேன். இடையில் வந்து போவேன். தாவா சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது பட்டா, சிட்டா யார் பெயரில் உள்ளது போன்ற விவரங்கள் தெரியாது. ஆதிமூலம் அழைத்ததன் பெயரில் தான் நான் சாட்சி சொல்ல வந்தேன். ஆதிமூலத்துடன் உடன் பிறந்தவர்கள் நான்கு பேர்கள் ஆவார்கள். அனைவரும் உயிருடன் தான் இருக்கிறார்கள். வாதியின் தந்தை சொத்தை கிரையம் பெற்ற

பிறகு எவ்வாறு அனுபவம் செய்து வந்தார்கள், எவ்வாறு தங்களுக்குள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது.

3. வாதியின் தந்தை சென்னையில் கூலி வேலை செய்து மூட்டை தூக்கி சம்பாதித்த பணத்தை வைத்து தாவா சொத்தை கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியும். அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. அவரும் வெளிநாடு சென்று வந்தவர்தான். அவர் தான் எனக்கு விசா ஏற்பாடு செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. வாதியின் தந்தை சென்னையில் மூட்டை தூக்கி கூலி வேலை செய்யவில்லை என்றாலும், வெளிநாடு செல்லவில்லை என்றாலும், கூட்டு குடும்ப சொத்தை தான் கிரையம் பெற்றதாக சொல்லி பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் பிரதிவாதிகளுக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமில்லை என்றும், நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆதிமூலத்துடன் பிறந்தவர்களில் ஒருவரான கருணாநிதி என்பவர் 25 வருடங்களாக ஊரில் இல்லாமல் எங்கயோ சென்றுவிட்டார் என்றால் சரிதான். ஆதிமூலத்தின் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரத்தை தவிர பின்னிட்டு அவர்களுக்குள் எந்த பத்திரம் ஏற்பட்டது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. ஆதிமூலம் மற்றும் அவரது சகோதரர்களுக்குள் ஏற்பட்ட பாக பத்திரம் பற்றி எனக்கு தெரியும் என்றாலும், அதை மறைத்து தற்போது ஆதிமூலத்திற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Kunnam.

DMC KUNNAM